தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

15.03.2013 A.M

## அரிசி விலை குறைய தொடங்கியது

அறுவடைப் பணிகள் முடிவடைந்து புது அரிசி வரத் தொடங்கியிருப்பதைத் தொடர்ந்து, அரிசி விலை கடந்த சில தினங்களாக சற்று குறைந்துள்ளது. ஆனால், இந்த ஆண்டு போதுமான விளைச்சல் இல்லாததால் இந்த விலைக் குறைவு ஒரிரு மாதங்கள் மட்டுமே நீடிக்கும்; அதன்பின்பு மீண்டும் அரிசி விலை உயரும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் அரிசி உற்பத்தி ஆண்டுதோறும் குறைந்து வருகிறது. விளைநிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுதல், விவசாய வேலைக்கு ஆள்கள் தட்டுப்பாடு, உரம் விலை உயர்வு போன்ற காரணங்களால் நெல் சாகுபடி பரப்பு ஒவ்வோராண்டும் சுருங்கி வருகிறது.

அதிலும் இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை மற்றும் வடகிழக்குப் பருவமழை பொய்த்துப் போனதால், நெல் சாகுபடி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் சராசரியாக ஆண்டுக்கு 28 முதல் 30 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி இருக்கும்.

ஆனால், இந்த ஆண்டு வெறும் 14 லட்சம் மெட்ரிக் டன் அளவே இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

விவசாய உற்பத்தி பாதிப்பு மற்றும் பிற மாநிலங்களில் நெல் விலை உயர்வால் தமிழகத்தில் அரிசி விலை இந்த ஆண்டு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்தது.

கடந்த சில மாதங்களாக அனைத்து ரக அரிசி விலையும் விண்ணைத் தொடும் அளவுக்கு உயர்ந்ததால் சாதாரண, நடுத்தர மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். பொன்னி ரக அரிசி கிலோ ரூ.50 வரை விற்பனை செய்யப்பட்டது. மதுரை டொப்பி அரிசி கிலோ ரூ.34, அம்பை 16 ரக அரிசி ரூ.35, ஐ.ஆர்.20 ரூ.34, ஐ.ஆர்.50 ரூ.30 என அனைத்து ரக அரிசியின் விலையும் உச்சத்தில் இருந்தது.

குறையும் விலை: இந்நிலையில், கடந்த சில நாள்களாக தமிழக மார்க்கெட்டுகளில் அரிசி விலை சற்று குறையத் தொடங்கியிருக்கிறது.

தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் அறுவடைப் பணிகள் முடிவடைந்து புது அரிசி வரத் தொடங்கியிருப்பதால், விலை சற்று குறைந்திருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

திருநெல்வேலி மார்க்கெட்டில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு கிலோ ரூ.34-க்கு விற்பனை செய்யப்பட்ட மதுரை டொப்பி அரிசி வியாழக்கிழமை கிலோ ரூ.32-க்கு விற்பனை செய்யப்பட்டது. 25 கிலோ கொண்ட ஒரு மூட்டை மதுரை டொப்பி அரிசி விலை ரூ.850-ல் இருந்து ரூ.800 ஆக குறைந்துள்ளது.

அதுபோல கிலோ ரூ.38-க்கு விற்பனை செய்யப்பட்ட ஏ.கே.ஆர். பொன்னி அரிசி ரூ. 34ஆக குறைந்துள்ளது. ரூ.32-க்கு விற்கப்பட்ட ஐ.ஆர். 20 ரக அரிசி ரூ.30 ஆக குறைந்துள்ளது.

ரூ.30-க்கு விற்பனை செய்யப்பட்ட ஐ.ஆர். 50 ரக அரிசி ரூ.27 ஆக குறைந்துள்ளது. ரூ.40 வரை விற்பனை செய்யப்பட்ட டீலக்ஸ் பொன்னி அரிசி ரூ.35 ஆக குறைந்துள்ளது. அனைத்து ரக அரிசியும் கிலோவுக்கு ரூ.2 முதல் ரூ.3 வரை குறைந்துள்ளது. ஒரு மூட்டைக்கு ரூ.50 முதல் ரூ.100 வரை குறைந்துள்ளது.

காரணம் என்ன? இதுகுறித்து பாளையங்கோட்டை பகுதியில் அரிசி மொத்த விற்பனை கடை நடத்தி வரும் ஆர். ரவிகுமார் கூறுகையில், பல்வேறு இடங்களில் அறுவடைப் பணிகள் முடிவடைந்து புது அரிசி வந்துள்ளதாலேயே அரிசி விலை சற்று குறைந்துள்ளது. இருப்பினும் புது அரிசியின் தரம் குறைவாகவே உள்ளது. பழைய அரிசி போன்று சாப்பாட்டுக்கு சுவையாக இல்லை. எளிதில் குழைந்துபோய்விடுவதால், பழைய அரிசியையே மக்கள் விரும்பி வாங்குகின்றனர்.

தமிழகம் முழுவதும் அறுவடைப் பணிகள் முழுமையாக முடிவடைந்தால் கிலோவுக்கு மேலும் ரூ.1 முதல் ரூ.2 வரை குறைய வாய்ப்புள்ளது. இந்த விலைக் குறைவும் 2 மாதங்களுக்கு மட்டுமே நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகம் உள்ளிட்ட தென்மாநிலங்களில் இந்த ஆண்டு மழை போதுமான அளவு பெய்யாததால் நெல் விளைச்சல் மிக மிகக் குறைவு. எனவே, 2 மாதங்கள் கழித்து மீண்டும் அரிசி விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அரிசி விலை அதிகமாகவே இருக்கும் நிலை உள்ளது. எனவே, அரசு முன்னெச்சரிக்கையாக வெளிமாநிலங்களில் இருந்து போதுமான நெல் மற்றும் அரிசியை கொள்முதல் செய்து இருப்பில் வைத்தால் மட்டுமே அரிசி விலையைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியும் என்றார்.

## தாட்கோ திட்டங்களில் பயன்பெற ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்'

தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரும் 30-ஆம் தேதிவரை அனுப்பலாம் என்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் சி. சமயமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வியாழக்கிழமை அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நிலம் வாங்குதல் மற்றும் மேம்படுத்துதல், தொழில் முனைவோர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம், மருத்துவமனை அமைத்தல், பெட்ரோல், டீசல், கேஸ் சில்லறை விற்பனை நிலையம், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான சுழல்நிதி, பொருளாதார கடனுதவி, துரித மின் இணைப்புத் திட்டம், விருப்புரிமை நிதி திட்டம், இந்திய குடிமைப்பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி ஆகிய திட்டங்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் உதவி பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்கள் இந்து ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும். 18 முதல் 55 வயதுக்கு உள்பட்டவராக இருக்க வேண்டும்.

குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.1 லட்சம். சிறப்புத் திட்டமான பெட்ரோல், டீசல், கேஸ் சில்லறை விற்பனை நிலையம் அமைக்க குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 லட்சம் வரை இருக்கலாம்.

இத் திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் ட்ற்ற்ல்:ஹல்ல்ப்ண்ஞ்ஹற்ண்ர்ய்.ற்ஹட்ஞ்ர்.ஞ்ர்ம் என்ற இணையதள முகவரியில் விண்ணப்பத்தை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யும்போது குடும்ப அட்டை எண் அல்லது இருப்பிடச் சான்று, சாதிச் சான்று, வருமானச் சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி ஆகியவற்றை அதற்கான இடத்தில் அவசியம் பதிவு செய்யவேண்டும். இதுபோல் திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியையும் அதற்கான இடத்தில் குறிப்பிட வேண்டும். புகைப்படத்தை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் என்றார் .

## சிறுதானியக் கருத்தரங்கு, உணவு விழா

தூத்துக்குடி மாவட்ட வேளாண்மைத் துறை சார்பில், சிறுதானிய ஊக்குவிப்புத் திட்டம் 2012-2013-ன் கீழ் மாவட்ட அளவிலான சிறுதானியக் கருத்தரங்கு மற்றும் உணவு விழா கோவில்பட்டியில் நடைபெற்றது.

கோவில்பட்டி நகர்மன்றத் தலைவி எஸ்.கே.ஜான்சிராணி சங்கரபாண்டியன் தலைமை வகித்தார். தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் த.ரஞ்சித்சிங்தனராஜ் முன்னிலை வகித்தார்.

கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் து.ஜவாஹர், பயிர் மரபியல் துறைப் பேராசிரியர் சங்கரபாண்டியன், வேளாண் பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் ராம்குமார், மதுரை மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பேராசிரியர் மற்றும் தலைவர் பார்வதி ஆகியோர் பேசினர்.

ராஜபாளையம் ஸ்ரீசாஸ்தா சிறுதானிய உணவுகள் நிறுவன வெங்கடசாமி, சிறுதானிய உணவுகள் கண்காட்சி மற்றும் செயல்விளக்கம் அளித்தார்.

தூத்துக்குடி வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய அரசு திட்டம்)பொன்காத்தபெருமாள், வேளாண் பொருள் தரக் கட்டுப்பாட்டு அதிகாரி மதிவாணன், கோவில்பட்டி நகர்மன்ற துணைத் தலைவர் ராமர், நகர்மன்ற உறுப்பினர் மதி, மாவட்ட கவுன்சிலர் லட்சுமணப்பெருமாள், நகர்மன்ற உறுப்பினர்கள் இருளப்பன், பத்மா, ஜார்ஜ் உள்பட விவசாயிகள் திரளானோர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் குருமூர்த்தி வரவேற்றார். கோவில்பட்டி வேளாண்மை உதவி இயக்குநர் சி.கருப்பசாமி நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் பாலமுருகன் தலைமையில், துணை வேளாண்மை அலுவலர் மாசானன், உதவி வேளாண்மை அலுவலர்கள் கபில்ராஜ், செந்தில்குமார், சரவணன், பரதாழ்வார் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

### மேட்டூர் அணையின் நீர்மட்டம்: 28.93 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 28.93 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு

489 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 373 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர்

திறக்கப்படவில்லை.

## பயிர் ரகங்கள், உழவர்களின் உரிமைகள் பாதுகாப்பு: வம்பனில் இன்று இலவச பயிற்ச

வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பயிர் ரகங்கள் மற்றும் உழவர்களின் உரிமைகள் பாதுகாப்பு குறித்த ஒரு நாள் விழிப்புணர்வுப்

பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை (மார்ச் 15) நடைபெறுவதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் வெளியிட்ட தகவல்:

வம்பனில் நடைபெறும் இப்பயிற்சிக்கு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கே. ராமசாமி தலைமை வகிக்கிறார். உழவுத் தொழிலையே முதன்மைத்

தொழிலாக கொண்ட நம் நாட்டில் பன்னெடுங்காலமாகவே உழவர்கள் மிகச் சிறந்த பயிர் ரகங்ளைத் தோ0ந்தெடுத்து அவற்றை மேம்படுத்தி, சிறந்த உழவியல் முறைகளை

கையாண்டு பயிரிட்டும், பராமரித்தும் வருகின்றனர்.

இவ்வாறு உழவர்கள் பராமரித்து வந்த பயிர் ரகங்களில் தற்போதுள்ள உழவர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இதைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு புதிய பயிர் ரகங்கள் பாதுகாப்பு மற்றும் பயிர் இனப்பெருக்காளர்களுக்கான அங்கீகாரத்தை வழங்கும் சட்டத்தை

அமல்படுத்தும்போது, உலகிலேயே முதன் முறையாக உழவர்களுக்கு அவர்களது பங்களிப்புக்கான அங்கீகாரத்தை வழங்க வழிவகை செய்துள்ளது.

வேளாண் ஆராய்ச்சி, வேளாண் கல்வி மற்றும் விரிவாக்கம் ஆகியவற்றில் நாட்டிலேயே முன்னோடியாக விளங்கும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், பயிர் ரகங்கள்

மற்றும் உழவர்களின் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் செயல்படுகளை விளக்கும் பயிற்சியை பல்கலைக்கழக விதை மையம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இப்பயிற்சியின் போது நடைபெறும் விவசாயக் கண்காட்சியில் உழவர்களின் ரகங்கள், தானியம், பயறுவகைப் பயிர்கள், காய்கறிப் பயிர்கள், பழ வகைகளில் சிறப்பு

தன்மை வாய்ந்த விளைபொருள்களுக்கு பரிசுகளும் வழங்கப்படும். எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் இப்பயிற்சியில் தங்களது ரகங்கள் மற்றும்

விளைபொருள்களை பொருள்காட்சியில் இடம்பெறச் செய்து பயன் பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர் க. வைரவன், தொலைபேசி - 04322-290321, உதவி பேராசிரியர் சு. மதியழகன் - கைபேசி எண்: 99445 20544 தொடர்பு

கொள்ளலாம்.

## பண்ணைக் குட்டையில் மீன் வளர்க்க மானியம்

கரூரில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பண்ணைக் குட்டையில் 50 சத மானியத்துடன் மீன் வளர்க்க விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாக காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ. 181 கோடியில் 15 ஆயிரம்

பண்ணைக் குட்டைகளை அமைக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். பண்ணைக் குட்டைகளைப் பயன்படுத்தி விவசாயிகளின் பயிர்களை நீர்வற்றிய காலக்கட்டத்தில், இறுதிக்

கட்ட நீர் தேவையை நிறைவு செய்வதுடன் அவற்றில் மீன் வளர்ப்பதன் மூலமும் விவசாயிகள் கூடுதல் வருவாயை ஈட்ட வாய்ப்புள்ளது.

இதனடிப்படையில் விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்படும் பண்ணைக் குட்டைகளில் மீன் வளத் துறை மூலம் மீன் வளர்க்க ஓராண்டுக்குத் தேவையான மீன்குஞ்சு,

உணவு, உரம் ஆகிய இடுபொருள்கள் என ஒரு பண்ணைக் குட்டை அமைக்க 50 சத மானியத்தில் மீன்குஞ்சு வளர்ப்புக்கு ரூ. 30 ஆயிரம், மீன் வளர்ப்புக்கு ரூ. 17.5 ஆயிரம்

வழங்கப்பட உள்ளது.

இதில் பயனடைய விரும்பும் கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை மூலம் தேர்வு செய்யப்பட்ட பண்ணைக் குட்டை விவசாயிகள் தங்களது விண்ணப்பங்களை, விவசாய

நில விவரங்களுடன், மாவட்ட ஆட்சியர், கரூர் மாவட்டம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ மார்ச் 31-க்குள் விண்ணப்பிக்கலாம்.

### மானியத்துடன் கடன் பெற விண்ணப்பிக்கலாம்

அரியலூர் மாவட்டத்தில் தாட்கோ திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத்

திட்டங்களுக்கு மானியத்துடன் கடனுதவி பெற மார்ச் 15 முதல் 30-ம் தேதி வரை ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இத்திட்டத்தின் கீழ் நிலம் வாங்குதல் மற்றும் மேம்படுத்துதல், தொழில் முனைவோர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டம்,

மருத்துவமனை அமைத்தல் (எம்.பி.பி.எஸ், பி.எஸ்.எம்.எஸ், பி.டி.எஸ், பி.பி.டி. பட்டதாரிகளுக்கு), பெட்ரோல், டீசல், கேஸ் சில்லறை விற்பனை நிலையம், மகளிர் சுய

உதவிக் குழுக்களுக்கான சுழல்நிதி மற்றும் பொருளாதாரக் கடனுதவி, துரித மின் இணைப்புத் திட்டம், விருப்புரிமை நிதித் திட்டம், இந்திய குடிமைப் பணி முதன்மை தேர்வு

எழுதுவோருக்கு நிதியுதவி வழங்கப்பட உள்ளது.

இத் திட்டத்தில் பயன் பெற விரும்புவோர் ட்ற்ற்ல்:ஹல்ல்ப்ண்ஞ்ஹற்ண்ர்ய். ற்ஹட்க்ஞ்ர்.ஞ்ர்ம் என்ற இணைய முகவரியில் விண்ணப்பத்தை ஆன்லைனில் பதிய வேண்டும்.

### இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (மார்ச் 15) காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் (மார்ச் 15)

நடைபெறுகிறது.

கூட்டத்தில் வேளாண் தொடர்பான நீர்ப்பாசனம், வேளாண் கடனுதவி தொகைகள், இடுபொருள்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள்

குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

இதில் விவசாயிகள், சங்கப் பிரமுகர்கள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவித்துப் பயன் பெறலாம். ஆட்சியர் எம். ரவிக்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பில்

இதைத் தெரிவித்தார்.

## விவாயிகளுக்குப் பயிற்சி

காவேரிப்பட்டணம் அருகே வியாழக்கிழமை கிராம அளவிலான விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

காவேரிப்பட்டணத்தை அடுத்துள்ள கரகூரில் கிருஷ்ணகிரி உழவர் பயிற்சி நிலையம் சார்பில் நடைபெற்ற பயிற்சித் தொடக்க நிகழ்ச்சிக்கு உழவர் விவாதக் குழு அமைப்பாளர் கே.எம்.ராம கவுண்டர் தலைமை வகித்தார்.

உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் ரவி, வேளாண்மை அலுவலர் புனிதவள்ளி, அட்மா தொழில்நுட்ப நிபுணர்கள் வெற்றிவேல், ராஜேந்திரன் ஆகியோர் பேசினர்.

50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

## தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி பயிற்சி

தருமபுரி, கிருஷ்ணகிரி உள்பட 14 மாவட்டங்களைச் சேர்ந்த 80 தோட்டக்கலைத் துறை தொழில்நுட்ப அலுவலர்களுக்கு மாநில அளவிலான பயிற்சி முகாம் தருமபுரியில் நடைபெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கிய முகாமை வேளாண்மைத் துறையின் இணை இயக்குநர் பொ.மனோகரன் தொடக்கிவைத்தார்.

முகாமில் வீரிய ஒட்டு காய்கறிகள் சாகுபடி, வாழை, மலர்கள் சாகுபடி தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டன.

பசுமை இல்லங்களுக்கு சென்று தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டன.

பேராசிரியர் ந.தமிழ்செல்வன், உதவிப் பேராசிரியர்கள் கே.இந்துமதி, ஆன்டர்சன், எம்.சங்கீதா, என் சண்முகம், உதவிப் பொறியாளர் டி.ராஜசேகரன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை தருமபுரி மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் (பொறுப்பு) பொ.இமானுவேல் உள்ளிட்டோர் செய்திருந்தனர்

### விளைச்சல், விலை குறைவால் தர்ப்பூசணி விவசாயிகள் வேதனை

தருமபுரி மாவட்டத்தில் வறட்சியால் விளைச்சல் பாதிப்பு, குறைந்த விலை போன்ற காரணங்களால் தர்ப்பூசணி சாகுபடி செய்த விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர்.

உடல் சூட்டை போக்கும் நீர்ச்சத்து அதிகம் உள்ள பழங்களில் தர்ப்பூசணி முதலிடம் வகிக்கிறது. கோடை காலத்தில் அறுவடைக்கு ஏற்ற இந்த தோட்டக்கலைப் பயிரானது டிசம்பர், ஜனவரி மாதங்களில் சாகுபடி செய்யப்படுகின்றன.

இந்தப் பயிரானது மிதமான வெப்பம், அளவான ஈரப்பதம், நல்ல சூரிய வெளிச்சம் உள்ள காலங்களில் நன்கு வளரக் கூடியது.

தர்ப்பூசணி நல்ல முதிர்ச்சி அடையும்போது வெப்பநிலை அதிகமாக இருந்தால் அதன் சுவை அதிகரிக்கும். 90 நாள் பயிரான இதை கவனமுடன் பராமரிக்க வேண்டியது அவசியம்.

தமிழகத்தில் திண்டிவனம், பண்ரூட்டி, கடலூர், பொள்ளாச்சி, உடுமலைபேட்டை, கரூர் உள்ளிட்ட பகுதிகளிலும், கர்நாடகத்திலும் அதிகளவில் தர்ப்பூசணி சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக தருமபுரி மாவட்டத்தில் அரூர், மொரப்பூர், பென்னாகரம், பாலக்கோடு ஆகியப் பகுதிகளில் தர்ப்பூசணி சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நிகழாண்டில் தர்ப்பூசணி சாகுபடி செய்த தருமபுரி மாவட்ட விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

தருமபுரியை அடுத்துள்ள கர்த்தாரப்பட்டியைச் சேர்ந்த விவசாயி பி.பழனிசாமி இரண்டு ஏக்கர் பரப்பளவில் பத்தீஸ்ஷர் என்ற ரக தர்ப்பூசணியை சாகுபடி செய்தார். சொட்டுநீர் பாசனம் மூலம்

சாகுபடி செய்த இவர், உரம், பூச்சி மருந்து, ஆள்கள் கூலி, பராமரிப்பு செலவு என ரூ.45 ஆயிரம் செலவு செய்தாராம்.

ஒரு வார இடைவெளியில் இரண்டு முறை அறுவடை

செய்த அவருக்கு, சிறிய அளவிலான பழம் 3 டன்னும், பெரிய அளவிலான பழம் 13 டன் என மொத்தம் 16 டன் கிடைத்தது. இதில் அவருக்கு மொத்தம் ரூ.38 ஆயிரம் வருவாய் கிடைத்ததாம்.

தருமபுரி மாவட்டத்தில் வறட்சியால் உற்பத்தி குறைந்தது மட்டுமல்லாமல், அண்டை மாவட்டங்கள், மாநிலங்களிருந்தும் அதிக அளவில் பழவரத்து அதிகமாக இருந்ததால் பழங்களை குறைந்த விலைக்கு வியாபாரிகள் வாங்கியதால் நஷ்டம் ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகளிடமிருந்து கிலோ ரூ.3 முதல் ரூ. 5 வரை வாங்கும் வியாபாரிகள் வெளிச்சந்தையில் கிலோ பழம் ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனை செய்கின்றனர்.

விவசாயிகளிடமிருந்து வாங்கும் விலைக்கும், சந்தையில் வியாபாரிகள் விற்கும் விலைக்கும் அதிக வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனவே, விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

### பவானிசாகர்நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 38.60 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 365 கனஅடி நீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் குடிநீருக்காக 150 கனஅடி நீர் திறக்கப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையின் மொத்த நீர் இருப்பு 2.24 டிஎம்சி.

### நடப்பாண்டில் 75 ஆயிரம் மெட்ரிக் டன் சான்று விதை உற்பத்தி

நடப்பு நிதியாண்டில் சான்று விதை உற்பத்தி 75 ஆயிரம் மெட்ரிக் டன் என்ற இலக்கை எட்டியுள்ளது என்று தமிழ்நாடு விதை சங்க மாநிலச் செயலர் சி. காளிதாஸ் கூறினார்.

இதுகுறித்து தாராபுரத்தில் அவர் நிருபர்களிடம் வியாழக்கிழமை கூறியது: பருவநிலை மாற்றம், வறட்சி காரணமாக சாகுபடி பரப்பு குறைந்தபோதும், தமிழ்நாடு விதை சங்க உறுப்பினர்கள் சார்பில் கடந்த ஆண்டின் உற்பத்திக்கு நிகரான சான்று விதை உற்பத்தி இந்த ஆண்டு

எட்டப்பட்டுள்ளது. தரமான விதை தடையின்றியும், தட்டுப்பாடு இல்லாமலும் கிடைக்க வேளாண் துறையினருடன் விதை சங்கம் இணைந்து செயல்படுகிறது.

உபநதிகளான பவானி, அமராவதி ஆகியவற்றுக்கு அண்டை மாநிலங்களால் ஏற்படும் சாதக, பாதகங்களை தமிழக அரசு சட்டரீதியாகக் கண்காணிக்க வேண்டும். அதே போல் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழக வேளாண்துறையில் விதைசான்று பிரிவில் 15 சதவீத பணியிடங்கள் காலியாக உள்ளன. அவை நிரப்பட வேண்டும். தரம் உறுதி செய்யப்படாத விதைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் உற்பத்தியாளர்கள் மீது விதைச்சான்று துறை எடுக்கும் கடும் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு விதை சங்கம் முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்றார்.

### தென்னை விவசாயிகள் நல வாரியம் முறையாகச் செயல்பட வேண்டும்

தென்னை விவசாயிகள் நலவாரியத்தை முறையாகச் செயல்படுத்த மாநில அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ்நாடு கள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக இயக்கத்தின் கள ஒருங்கிணைப்பாளர் செ.நல்லசாமி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தற்போது தென்னை நலவாரியத்தின் செயல்பாடு முடக்கப்பட்டுள்ளது. வறட்சி, விலையின்மை, கட்டுப்பாடற்ற பாமாயில் இறக்குமதி காரணமாக நலிவடைந்துள்ள தென்னை விவசாயத்தைக் காப்பாற்றும் பொருட்டு, நலவாரியத்தை முறையாகச் செயல்படுத்த வேண்டும். அழிந்து வரும் பனைத் தொழிலைக் காப்பாற்ற, இதன் நல வாரியத்தையும் புதுப்பிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை ஊழல், முறைகேடின்றி நியாயமான முறையில் நடத்த வேண்டும்.

தமிழகத்தில் வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள 31 மாவட்டங்களில் காவிரி டெல்டா பகுதியின் 3 மாவட்டங்களுக்கு மட்டுமே சேத மதிப்பீட்டின் அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விவசாயக் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும்

தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலையில் விவசாயிகள் வங்கிகளில் பெற்ற கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என வைகோ தெரிவித்தார்.

விருதுநகர் தேசபந்து மைதானத்தில் மதிமுக விவசாய அணி சார்பில் வியாழக்கிழமை உண்ணாவிரதம் நடைபெற்றது. இதனை மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தொடங்கி வைத்து கூறியதாவது: தமிழகத்தில் சென்னையை தவிர மற்ற மாவட்டங்கள் அனைத்தும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிப்புச் செய்து நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு அறிவித்திருந்தது. ஆனால் இதுவரையில் நிவாரணம் வழங்காமல் காலதாமதம் செய்து வருகின்றனர்.

மேலும், தமிழகத்தில் வறட்சியால் விவசாயம் பாதித்த நிலையில், குறிப்பாக நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ஜெகநாதன், விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த பாண்டி உள்ளிட்ட 19 பேர் வரை உயிரிழந்து உள்ளனர். இவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்.

அதேபோல் டெல்டா பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அமைச்சர் குழுவினர் ஆய்வு செய்து விட்டுச் சென்ற நிலையிலும், நிவாரணம் வழங்கப்படவில்லை. எனவே தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து பம்ப்செட் விவசாயிகளுக்கும் ரூ. 25 ஆயிரமும், மானாவாரி விவசாயிகளுக்கு ரூ. 15 ஆயிரமும் வழங்கவும், அதேபோல் வறட்சி காலங்களில் வேலையிழந்த கூலி தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ. 10 ஆயிரமும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், விவசாயிகள் தேசிய வங்கிகளில் பெற்ற விவசாயக் கடனை மத்திய அரசும், கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள கடனை மாநில அரசும் தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வைகோ தெரிவித்தார்.

## தாட்கோ கடன் மானியத் திட்டம்:ஆன் லைனில் விண்ணப்பிக்கலாம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ், வங்கிக் கடனுதவி மற்றும் அரசு மானியம் பெற விரும்புவோர் ஆன்-லைன் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று, மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தாட்கோ சார்பில் நிலம் வாங்குதல் மற்றும் மேம்படுத்துதல், தொழில்முனைவோர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம், மருத்துவப் பட்டம் பெற்றவர்கள் மருத்துவமனை அமைத்தல், பெட்ரோல், டீசல் மற்றும் கேஸ் விற்பனை நிலையம் அமைத்தல் ஆகியவற்றுக்கு, வங்கிக் கடன் மற்றும் மானியம் வழங்கப்படுகிறது.

மேலும், சுய உதவிக் குழு சுழல்நிதி, பொருளாதாரக் கடன் வழங்கப்படுகிறது. துரித மின் இணைப்பு, விருப்புரிமை நிதி, குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி ஆகிய திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் கடனுதவி, மானியம் மற்றும் நிதி உதவி பெற விரும்புவோர்

ட்ற்ற்ல்:ஹல்ல்ப்ண்ஞ்ஹற்ண்ர்ய்.ற்ஹட்க்ஞ்ர்.ஞ்ர்ம் என்ற இணையதள முகவரியில் ஆன்-லைன் மூலம் விண்ணப்பத்தை பதிவு செய்யவேண்டும். குடும்ப அட்டை அல்லது இருப்பிடச் சான்று, ஜாதிச் சான்று, வருமானச் சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி உள்ளிட்ட விவரங்களை விண்ணப்பத்தில் பதிவு செய்யவேண்டும். திட்ட அறிக்கை விவரத்தை குறிப்பிட வேண்டும்.

புகைப்படத்தை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்யவேண்டும். விண்ணப்பிப்பதற்கான தகுதிகள் மற்றும் விண்ணப்பிக்கும் முறை குறித்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் தாட்கோ திட்ட அலுவலகத்தில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்று, அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நெற்பயிருக்கு நிவாரணம் கோரி விவசாயிகள் சாலை மறியல்

வறட்சியால் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு நிவாரணம் வழங்கக் கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் சாலைமறியல் போராட்டம் புவனகிரி அருகே வியாழக்கிழமை நடைபெற்றது.

புவனகிரி ஒன்றியத்தில் உள்ள மஞ்சக்கொல்லை, மிராளூர், வாண்டையாங்குப்பம், வத்தராயன்தெத்து, சீயப்பாடி, கிளாவடிநத்தம் ஆகிய கிராமங்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் போதிய மின்சாரம், நீர் இல்லாமல் காய்ந்து போனது.

காய்ந்து போன பயிர்களை மாடு மேய்ந்து விட்டதாலும், வைக்கோலுக்காக அறுவடை செய்ததாலும் வேளாண் அதிகாரிகள் வறட்சி நிவாரணப் பட்டியலில் அந்நிலங்களைச் சேர்க்கவில்லை. எனவே விடுபட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வலியுறுத்தி மஞ்சக்கொல்லை கிராமத்தில் சாலைமறியல் போராட்டம் நடைபெற்றது.ஊராட்சி மன்ற

முன்னாள் தலைவர் அமிர்தலிங்கம், வள்ளலார் கரும்பு விவசாயிகள் சங்க நிர்வாகி சொக்கலிங்கம் ஆகியோர் தலைமை வகித்தனர். கரும்பு விவசாயிகள் சங்க மாநிலச் செயலாளர் காமராஜ்,

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஜி.மாதவன், ஒன்றியச் செயலாளர் ராமலிங்கம், தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கச் செயலாளர் ஆதிமூலம், தலைவர் பாபு உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

தகவல் அறிந்த புவனகிரி வேளாண் அதிகாரி ஆறுமுகம், வருவாய் ஆய்வாளர் நந்திதா மற்றும் போலீஸôர் சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி சமரசம் செய்தனர். இதைத் தொடர்ந்து போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

## விவசாயத் தொழிலாளர் சங்க பிரசாரக் கூட்டம்

திருக்கோவிலூர் அருகே அரகண்டநல்லூரில் தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர்கள் சங்க பிரசார கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பி.ஜெயராமன் தலைமை தாங்கினார். அகில இந்திய செயலர் அ.ராமமூர்த்தி, மாநிலக்குழு உறுப்பினர் கே.கருணாமூர்த்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலர் ஏ.வி.சரவணன், ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்டச் செயலர் ஆ.சௌரிராஜன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

கோயில், மசூதி, மடம், அறக்கட்டளை நிறுவனம் மற்றும் அரசுக்குச் சொந்தமான இடங்களை வகைப்பாடு செய்து, விவசாயத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும், பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சீரமைக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, வரும் ஏப்ரல் 2-ம் தேதி சென்னை கோட்டையை நோக்கி நடைபெறும் பேரணிக்கு மக்கள் மத்தியில் ஆதரவு திரட்டும் வகையில் இப்பிரசார கூட்டம் நடைபெற்றது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**15.03.2013 A.M**

---

## வாடல் நோயால் அழியும் தென்னை பாதிப்பில் விவசாயிகள்

வத்திராயிருப்பு: தென்னை விவசாயத்தையே கேள்விக்குறியாக்கும் வாடல் நோயால்,விவசாயிகள் பாதிக்கின்றனர். இவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு முன் வர வேண்டும்.தென்னை மரங்களில் கடந்த இரு ஆண்டுக்கு மேலாக வாடல் நோய் பரவி வருகிறது. வேரிலிருந்து உருவாகி, காய்ப்பை நிறுத்தி மட்டைகளை உதிரச் செய்கிறது. பின்னர் மரம் காய்ந்து 90 நாட்களில் மொட்டை மரங்களாகி விடுகின்றன. நோய் எதனால் வருகிறது. என்பது விவசாயிகளுக்கு புதிராக உள்ளது. பொதுவாக தென்னைக்கு நோய்கள் வந்தாலும் , தற்காலிக பாதிப்புதான் ஏற்படும். ஆனால் இந்த வாடல் நோயால், தாக்கப்பட்ட மரங்கள் அழித்து விடுவதால் , விவசாயிகளுக்கு கிடைக்கும் மகசூல் நிரந்தரமாக பாதிக்கிறது.நிரந்தர இழப்பு ஏற்பட்டு, விவசாயமே கேள்விக்குறியாகும் நிலை உள்ளது. ஏற்கனவே, வறட்சி, மின்தடையால் மரங்களுக்கு நீர்பாய்ச்ச முடியாமல், மகசூலில் 40 சதவீதம் இழப்பை சந்தித்து வரும் விவசாயிகள்,தற்போது வாடல் நோய் தாக்குதலால்,நிரந்தர இழப்புகளுக்கு ஆளாகி உள்ளனர். ஒருமரத்திற்கு 2000 ரூபாய் வீதம் இழப்பீடு வழங்க, விவசாயிகள் அரசை கோரியுள்ளனர். மகாராஜபுரம் பகுதி விவசாயி ஸ்ரீராமுலு ,"" இழப்புகளுக்கு நிவாரணம் கோரி கலக்டரிடம் மனு கொடுத்துள்ளோம். கிடைத்தால் மட்டுமே விவசாயத்தை தொடரமுடியும்," என்றார்.

## பால் உற்பத்தியாளர்கள் செயல் விளக்க பயிற்சி

தூத்துக்குடி: கரிசல்குளத்தில் பால் உற்பத்தியாளர்கள் செயல் விளக்க பயிற்சி முகாம் நடந்தது.கரிசல்குளம் கிராமத் தைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர்கள் எவ்வாறு மிக எளிமையான ஒரு மாட்டுக் கொட்டகையை அமைப்பது, அதில் எப்படி பசு கோமியம் மற்றும் சாணத்தை எப்படி முறையாக சேமிப்பது, அவ்வாறு சேமித்ததை கொண்டு எவ்வாறு பஞ்சகாவ்யா, ஜீவாமிருதம், அமிர்த கரைசல் போன்ற இயற்கை உரங்களை தயாரிப்பது என்பதை விளக்கும் வகையில் பல விவசாய வல்லுனர்கள், கால்நடை அதிகாரிகள் முன்னிலையில் செயல் விளக்கம் செய்து காண்பித்தனர். இந்த கிராம மக்களின் இயற்கை வழி விவசாயத்துக்கு நபார்டு பாங்க், ஆவின்,

ஈராட்சி, கரிசல்குளம் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் ஆதனூரை சேர்ந்த வீரபாண்டிய கட்டபொம்மன் உழவர் மன்றம் வழிகாட்டியுள்ளது. நிகழ்ச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் உழவர் மன்ற உறுப்பினர் முத்துலிங்கம், பஞ்சகாவ்யா தயாரிப்பு என்பதை விளக்கி காட்டினார். ஒரு ஏக்கருக்கு ரூ.300 மட்டுமே செலவழித்து பஞ்சகாவ்யா செய்ய முடியும் என்றும், செலவுகளுக்கு அப்பாற்பட்டு நிலத்துக்கு உயிரூட்ட முடியும், செயற்கை உரங்களால் ஜீவனற்று போன நிலங்களை மீண்டெடுக்க முடியும் என்றும் கூறினார். விழிப்புணர்வு கருத்தரங்கில், நபார்டு மாவட்ட மேம்பாட்டு அதிகாரி நடராஜன் பேசுகையில், பாங்குகள் மூலமாக பால் உற்பத்திக்காக பசு மாட்டு கடன்கள் வழங்கப்பட்டது. பாங்குகளும், ஆவின் நிறுவனமும், கால்நடை துறையும், விவசாய துறையும், மீண்டும் இணைந்து அந்த பால் உற்பத்தியாளர்களுக்கு, எப்படி எளிமையான கொட்டகை அமைத்து இயற்கை விவசாயத்துக்கு பயன்அளிக்கும் வகையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு துணை வருமானமும் கிடைக்கும். அதே நேரத்தில் விவசாயத்தில், செயற்கை உரங்களை நம்பி இருக்கும் நிலை படிப்படியாக குறையும் என்றார். மதுரை வேளாண் உணவு தொழில் வர்த்தக சங்கம் செயல் இயக்குனர் சுரேஷ்குமார், விவசாய ஆலோசகர் கோபி, ஆவின் விரிவாக்க அலுவலர் முத்துக்குமார், பால் உற்பத்தியாளர் கூட்டு பொறுப்பு குழு தலைவர் துரைராஜ் ஈராட்சி பால் உற்பத்தியாளர் சங்க செயலர் லிங்கம், கோவில்பட்டி வேளாண்மை அலுவலர் உழவர் சந்தை விஜயன் நீலகடையன் ஆகியோர் கலந்து கொண்டனர். வீரபாண்டிய கட்டபொம்மன் உழவர் மன்ற செயலர் சண்முக மல்லுச்சாமி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

### வீட்டுத் தோட்டத்தில் 1.5 கிலோ காளான்

ஈரோடு: ஈரோடு பகுதியில், வீட்டுத் தோட்டத்தில் 1.5 கிலோ காளான் வளர்ந்ததை, அப்பகுதி மக்கள் ஆச்சிரியத்துடன் பார்த்துச் சென்றனர்.

ஈரோடு, மூலப்பாளையம், விவேகானந்தர் வீதியைச் சேர்ந்தவர் வடிவுக்கரசி, 40. இவரது வீட்டுத் தோட்டத்தில் பப்பாளி, வாழை, பூச்செடிகள், கீரை வகைகள் ஆகியவற்றை வளர்த்து வருகிறார்.கடந்த மூன்று நாட்களுக்கு முன், தோட்டத்தில் சிறிய அளவிலான காளான் முளைத்திருந்தது. அடுத்த இரண்டு நாட்களில், திடீரென, 1.5 கிலோ எடையில் பெரிய அளவிலான காளானாக வளர்ந்திருந்தது.

ஆச்சரியமடைந்த வடிவுக்கரசி குடும்பத்தினர், நேற்று காளானை எடுத்துப் பார்த்தனர். அக்கம்பக்கத்தினரும், பெரிய அளவிலான பார்த்துவிட்டு சென்றனர். இதுகுறித்து வடிவுக்கரசி

கூறியதாவது:

கடந்த, 48 மணி நேரத்தில், 1.5 கிலோ அளவுக்கு வளர்ந்துள்ளது. சமைத்து சாப்பிட உகந்த காளானா என்பது குறித்து விசாரித்து, சமைத்து சாப்பிடுவோம், என்றார்.

### வறட்சியால் காய்கறி விவசாயிகள் கவலை

கோத்தகிரி: கோத்திகிரி பகுதியில் வறட்சி நிலவுவதால், காய்கறி சாகுபடி செய்த விவசாயிகள் மோட்டார் உதவியுடன், தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன், மூன்று நாட்கள் ஓரளவு மழை பெய்தது. மழை தொடரும் என, விவசாயிகள் எதிர்பார்த்த நிலையில், மழை பொய்த்ததால், ஏமாற்றம் அடைந்தனர்.

குறிப்பாக, கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில், மிக குறைந்தளவே மழை பெய்துள்ளது. தொடர்ந்து, வெயில் வாட்டி எடுப்பதால், விவசாய நிலங்கள் வறண்டு காணப்படுகிறது.

கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளான மிளிதேன், கேர்கம்பை, நெடுகுளா, சுள்ளிகூடு, கூக்கல்தொரை மற்றும் கட்டபெட்டு பகுதிகளில் நீர் ஆதாரமுள்ள நிலங்களில், காரட், முட்டைகோஸ், பீன்ஸ் உள்ளிட்ட காய்கறி சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.

இப்பகுதிகளில் உள்ள விளைபொருட்களை பாதுகாக்க, ஆற்றுப்படுக்கையில் இருந்து மோட்டார் உதவியுடன் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

மழை பெய்யாமல், வறட்சி தொடரும் பட்சத்தில், ஆற்று தண்ணீரும் வற்றக்கூடிய சூழல் உள்ளதால், விவசாயிகள் அச்சம் அடைந்துள்ளனர்.

### தாட்கோ பொருளாதார மேம்பாடு திட்டம்: விண்ணப்பிக்க அழைப்பு

அரியலூர்: தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும், பல்வேறு பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு விண்ணப்பிக்க, அரியலூர் கலெக்டர் ரவிக்குமார் அழைப்பு விடுத்துள்ளனர். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: அரியலூர் மாவட்டத்தில் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும், கீழ்கண்ட பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு, 2013 மார்ச், 15 முதல்,

மார்ச், 30ம் தேதி வரை, ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பத்துக்கான திட்டங்கள்: நிலம் வாங்குதல் மற்றும் மேம்படுத்துதல், தொழில்முனைவோருக்கான பொருளாதார மேம்பாட்டு திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்பு திட்டம். எம்.பி.பி.எஸ்., மற்றும் பி.பி.டி., பட்டம் பெற்றவர்கள் மருத்துவமனை அமைத்தல், பெட்ரோல், டீசல், காஸ் சில்லறை விற்பனை நிலையம் அமைத்தல், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான சுழல்நிதி மற்றும் பொருளாதார கடன், துரித மின் இணைப்பு திட்டம், விருப்புரிமை நிதி திட்டம். இந்திய குடிமை பணி முதன்மை தேர்வு எழுதுவோர்க்கான நிதி உதவி. மேற்கண்ட திட்டங்களுக்கு, மானியத்துடன் கூடிய கடனுதவி பெற விண்ணப்பிப்போர், இந்து ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும்.18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்பு திட்டத்துக்கு விண்ணப்பிப்போர், 35 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும். ஏனைய இதர திட்டங்களுக்கான வயது வரம்பு, 55 வயதுக்குள் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர்களுக்கான குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு, ஒரு லட்ச ரூபாய். சிறப்பு திட்டமான பெட்ரோல், டீசல்,காஸ் சில்லறை விற்பனை நிலையம் அமைக்க, குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் மூன்று லட்சம் வரை இருக்கலாம். இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர், சம்பந்தப்பட்ட இணையதள முகவரிக்கு சென்று, விண்ணப்பத்தை, ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யும்போது ரேஷன் கார்டு எண் அல்லது இருப்பிட சான்று, சாதி சான்று, வருமான சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி ஆகியவற்றை, அதற்கான இடத்தில் அவசியம் பதிவு செய்ய வேண்டும். மேலும் திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியையும், அதற்கான இடத்தில் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரரின் ஃபோட்டோவை ஸ்கேன் செய்து, பதிவேற்றம் செய்திட வேண்டும்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் இன்று நடப்பு

அரியலூர்: விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம், இன்று அரியலூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. இதுகுறித்து அரியலூர் கலெக்டர் ரவிக்குமார் வெளியிட்ட அறிக்கை: அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம், இன்று காலை, 11 மணிக்கு, கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கத்தில் நடக்கிறது. இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்ப்பாசனம், வேளாண் கடனுதவிகள், வேளாண் இடுபொருட்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண்மை மேம்பாட்டுக்கான நலத்திட்ட முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும்.

கூட்டத்தில் விவசாயிகள் பலரும் திரளாக பங்கேற்று, தமது குறைகளை தெரிவித்து பயனடையுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

### விவசாயிகளுக்கு இன்று பயிற்சி

ஆலங்குடி: வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில், பயிர் ரகங்கள் மற்றும் உழவர்களின் உரிமைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பயிலரங்கு இன்று நடக்கிறது. இதுகுறித்து வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தலைவர் வைரவன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், பயிர் ரகங்கள், உழவர்களின் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கப்படுகிறது. மேலும் விவசாய கண்காட்சியும் நடைபெறவுள்ளது.
இதில் பயிர் ரகங்கள், தானியம், பயறு வகை, காய்கறி பயிர்கள், பழவகைகளில் சிறப்பு தன்மை வாய்ந்த விளை பொருட்களுக்கு பரிசு வழங்கப்பட உள்ளது. எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள், இப்பயிற்சியில் தங்களது ரகங்கள், விளை பொருட்களை இடம் பெறச்செய்யலாம்.மேலும் தகவலுக்கு 04322-290321,99445-20544 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

### தாட்கோ திட்டங்களுக்கு விண்ணப்பிக்கலாம்

காஞ்சிபுரம்:தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் பயன்பெற, தகுதிவாய்ந்த ஆதிதிராவிட சமூகத்தை சேர்ந்தவர்களிடமிருந்து,விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.இதுகுறித்து, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் சித்ரசேனன் விடுத்துள்ள அறிக்கை:தாட்கோ மூலம், நிலம் வாங்குதல் மற்றும் மேம்படுத்துதல், தொழில் முனைவோர் பொருளாதார மேம்பாட்டு திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டம், மருத்துவமனை அமைத்தல், எரி பொ ருள் விற்பனை நிலையம், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான சுழல் நிதி, பொருளாதாரக் கடனுதவி, துரித மின் இணைப்பு திட்டம், விருப்புரிமை நிதி திட்டம், இந்திய குடிமைப்பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி, போன்ற பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.இத்திட்டங்களின் கீழ் பயன்பெற, ஆன்-லைன் மூலம் நாளை முதல் வரும் 30ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். மானியத்துடன் கடனுதவி பெற விண்ணப்பிப்பவர்கள், இந்து ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும். வயது 18 நிரம்பியிருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் உச்சவரம்பு ஒரு லட்சம் ரூபாய். சிறப்பு திட்டமான எரிபொருள் விற்பனை நிலையம் அமைக்க, குடும்ப ஆண்டு வருமானம் 3 லட்சம் ரூபாய் வரை இருக்கலாம்.திட்டத்தில் பயன்பெற விரும்புவோர்,

டttணீ://ச்ணீணீ(டுடிஞிச்tடிணிண.tச்டஞீஞிணி.ஞிணிட் என்ற இணைய தள முகவரிக்கு சென்று, விண்ணப்பத்தினை ஆன்-லைனில் பதிவு செய்ய வேண்டும்.இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கத்தரி விதை பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

திருவள்ளூர்:கத்தரி சாகுபடி செய்யும் விவசாயிகள், அதிக மகசூல் பெற, கத்தரி விதைகளை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என, மாவட்ட வேளாண்மைத் துறை தெரிவித்து உள்ளது.திருவள்ளூர் மாவட்டத்தில், காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிகமாக, கத்தரி பயிரிட்டு வருகின்றனர். சராசரியாக, ஒரு ஏக்கருக்கு, 8 மெட்ரிக் டன் மகசூல் பெறலாம். இதற்கு நல்ல தரமான கத்தரி விதைகள் இருத்தல் அவசியம். ஒரு ஏக்கருக்கு விதைக்க, 160 கிராம் விதை அவசியம். மேலும், கத்தரி விதை குறைந்தபட்ச முளைப்புத் திறன், 70 சதவீதம் இருந்தால்தான், அதிக மகசூல் பெற முடியும். எனவே, கத்தரி சாகுபடி செய்யும் விவசாயிகள், தாங்கள் பருவத்தில் விதைக்கும் முன்பு, தங்களிடம் உள்ள விதைகளிலிருந்து, 150 கிராம் மாதிரி எடுத்து, "வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை ஆய்வகம், 48, ஜே.என்.சாலை, பெரியகுப்பம், திருவள்ளூர்', என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். விதை பரிசோதனை செய்ய கட்டணம் ரூ.30 செலுத்த வேண்டும்.விதை பெறப்பட்ட நாளில் இருந்து, 14 நாட்களுக்குள் அதன் தரம் தெரிவிக்கப்படும். அதன் பிறகு விவசாயிகள் நாற்றங்கால் விதைப்பு மேற்கொண்டு பயன் பெறலாம் என, திருவள்ளூர், விதை பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர், முத்துப் பெருமாள் தெரிவித்து உள்ளார்

## விவசாயிகளுக்கு பயிற்சி கூட்டம்

சின்னசேலம்:சின்னசேலம் வேளாண்மை துறை சார்பில் திருந்திய நெல் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி கூட்டம் நடந்தது.சின்னசேலம் ஒன்றிய அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்கு வேளாண் உதவி இயக்குனர் கோவிந்தன் தலைமை தாங்கினார். அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் மவிசுதா முன்னிலை வகித்தார். வேளாண் அலு வலர் ரஜினிகாந்த் வரவேற் றார். சின்னசேலம் ஒன்றிய சேர்மன் ராஜேந்திரன் சிறப்புரை நிகழ்த்தினார்.வேளாண் அலுவலர்கள் தியாகராஜன், முருகேசன், தங்கதுரை, துரை ஆகியோர் திருந்திய நெல் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். அட்மா திட்ட சிறப்பு அலுவலர்கள் ஜெயபாலன், அன்பு ஆகியோர் திட்ட செயல்பாடுகள் குறித்து பேசினர்.சின்னசேலம் பகுதிகளைச் சேர்ந்த 50 விவசாயிகள் கலந்துக் கொண்டு பயனடைந்தனர்.

## கோடையில் சிந்து பசுக்கள் மர்ம சாவு நங்கவள்ளி பகுதி விவசாயிகள் "ஷாக்'

நங்கவள்ளி: நங்கவள்ளி சுற்றுப்பகுதியில், ஒரு மாதமாக பசு மாடுகள் மர்மமான முறையில் இறப்பது விவசாயிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஒன்றியத்தில் பெரும்பாலான விவசாயிகள் பால் வியாபாரத்துக்காக, சிந்து பசு மாடுகளை வளர்க்கின்றனர். பகலில் மேய்ச்சலுக்கு அனுப்பும் மாடுகளை, இரவில் தொழுவத்தில் கட்டி விடுகின்றனர்.

இந்நிலையில், நங்கவள்ளி சுற்றுப்பகுதியில், ஒரு மாதமாக சிந்து மாடுகள் மர்மமான முறையில் இறப்பது விவசாயிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இருவாரத்துக்கு முன், சூரப்பள்ளியை சேர்ந்த விவசாயி ரங்கசாமிக்கு சொந்தமான சிந்துமாடு தொழுவத்தில் மர்மமான முறையில் இறந்து கிடந்தது.

மேலும், அருகிலுள்ள நரியம்பட்டி கிராமத்தை சேர்ந்த விவசாயி மாதையனின் சிந்துமாடு, வாத்திப்பட்டியை சேர்ந்த சுந்தரம் என்பவரின் சிந்துமாடு, பெரியசோரகையை சேர்ந்த மாரியப்பன் என்பவரின் சிந்துமாடு உள்பட ஒரு மாதத்தில் எட்டுக்கும் மேற்பட்ட மாடுகள் மர்மமான முறையில் இறந்துள்ளது.சிந்து மாடுகள் மட்டும் எந்தநோய் என்பது கண்டு பிடிக்க முடியாமலேயே மர்மமான முறையில் இறப்பது விவசாயிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கால்நடை மருத்துவர்கள் கூறியதாவது:

மாடுகள் நோய் பாதிப்பினால் இறக்க வாய்ப்புள்ளது. ஆனால், நங்கவள்ளி பகுதியில் தற்போது கால்நடைகளை எந்தவித நோயும் தாக்கவில்லை.எனினும், கால்நடைகள் பாலீதின் காகிதத்தை உட்கொள்ளுமானால், இரைப்பையில் அடைப்பு ஏற்பட்டு, வயிறு வீக்கம் அடைந்து இறக்க வாய்ப்புள்ளது என்றனர். கோடை வெயில் காரணமாக மாடுகள் இறப்பதாக ஒரு தரப்பினர் கூறி வருகின்றனர். எனினும், பசுமாடுகளின் மர்ம சாவு நங்கவள்ளி விவசாயிகள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## வன விலங்குகளிடம் இருந்து பயிரை காக்க வேட்டி, சேலை வேலி அமைப்பு

பென்னாகரம்: வனவிலங்குகளிடம் இருந்து பயிர்களை காக்க, சேலைகள் மற்றும் வேட்டிகளை, வேலிகயாக, விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். தர்மபுரி மாவட்டம், விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில், வனத்தையொட்டியுள்ள மலை கிராமங்கள், பென்னாகரம், பாலக்கோடு, அரூர் உள்ளிட்ட பகுதிகளில், அதிகளவில் உள்ளன. இங்கு விவசாயிகள் சாகுபடி செய்யப்படும் பயிர்களை, காட்டுப்பன்றி உள்ளிட்ட வன விலங்குகள் அழித்து வருவதுடன், விவசாய பயிர்களை, அதிகளவில் சேதப்படுத்தி வருகிறது.

வன விலங்குகளிடம் இருந்து பயிர்களை காப்பாற்ற, பென்னாகரம் பகுதியில் வனத்தையொட்டியுள்ள, கோடுப்பட்டி, அருணாசலன் கொட்டாய், தெய்வம் கொட்டாய் உள்ளிட்ட பகுதிகளில், விவசாயிகள் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல் வெளிகளை சுற்றி, வண்ண, வண்ண சேலைகள் மற்றும், வேட்டிகளை, வேலியாக அமைத்துள்ளனர்.

அருணாலசன் கொட்டாயை சேர்ந்த முருகேசன் கூறியது: எங்கள் பகுதியையொட்டி, அடர்ந்த வனப்பகுதி உள்ளது. இங்கிருந்து காட்டுப்பன்றிகள் மற்றும் முயல், மான் போன்றவை அடிக்கடி விவசாய நிலத்திற்குள் புகுந்து, சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களை அழித்து, நாசப்படுத்தி வந்தது.வண்ண, வண்ண சேலைகள் மற்றும் வேட்டிகள் ஆகியவற்றை கொண்டு வயல் வெளிகளை சுற்றி கட்டி வைப்பதால், காட்டுப்பன்றி போன்ற உயரம் குறைந்த வனவிலங்குகளுக்கு நிலத்தில் உள்ள பயிர்கள் தெரியாது, மேலும், சேலை, வேட்டிகளில் உள்ள பல்வேறு வண்ணங்களால், தங்களது, பாதுகாப்பு கருதி, அவை நிலத்திற்குள் புகுவது இல்லை. இதனால், இப்பகுதியில் உள்ள விவசாயிகள், நிலக்கடலை, நெல், சாமை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்துள்ள நிலத்தை சுற்றி, சேலை, வேட்டிகளை கொண்டு தடுப்பு அமைத்துள்ளோம். இவ்வாறு கூறினார்.

## வறட்சியில் இருந்து கரும்பு பயிரை பாதுகாக்க விவசாயிக்கு அறிவுரை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், வறட்சியில் இருந்து கரும்பை பாதுகாக்க, அரூர் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை தனி அலுவலர் சாம்பசிவம் அறிவுரை வழங்கியுள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில், தற்போது, சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்துள்ள கரும்பு பயிர்கள் வாடியும், காய்ந்தும் வருகிறது. வறட்சியில் இருந்து கரும்பை, விவசாயிகள், சில தொழில் நுட்பங்களை கடைப்பிடித்து, கரும்பு பயிர்களை பாதுகாக்கலாம். கரும்பு நடவு செய்த வயல்களில், காய்ந்த கரும்பு சோகைகளை பரப்புவதன் மூலம், முளைப்பு பருவத்தில் ஏற்படும் வறட்சியை சமாளிக்கலாம். மறுதாம்பில் சோகையை அப்புறப்படுத்தாமல், தீயிடாமல், சோகையை நிலத்தின் மீது ஒரு போர்வை போல் பரப்ப வேண்டும். இதனால், மண்ணில் இருந்து, நீர் ஆவியாவது கட்டுப்படுத்தப்பட்டு, ஈரம் காக்கப்படும். மேலும், குருத்து புழுவின் தாக்குதலும், களைகளும், கட்டுப்படுத்தப்படும். பயிருக்கு நன்மை செய்யும் நுண்ணுயிர்களும் பெருக வாய்ப்புள்ளது. நிலம் ஊட்டமேறுகிறது. வறட்சிக் காலங்களில், கரும்பு பயிரின், 60வது, 90வது மற்றும், 120வது நாளில் ஏக்கருக்கு, 2.5 கிலோ பொட்டாஷ், 2.5 கிலோ யூரியாவுடன், 100 லிட்டர் தண்ணீரை கலந்து, இலைகள் மீது நன்கு படும்படி தெளிப்பதால், இலை வழியாக நீர் ஆவியாவதை கட்டுப்படுத்தலாம். வறட்சி ஏற்படும் போது, ஏக்கருக்கு, 50 கிலோ பொட்டாஷ் உரத்தை கூடுதலாக இடுவதால், கரும்பு பயிர் வறட்சியை தாங்கும். கரும்பு பயிரனாது, ஐந்து முதல் ஏழாவது மாதங்களில், வறட்சி ஏற்பட்டால், உரித்த கரும்பு சோகைகளை வயல்களை விட்டு அப்புறப்படுத்தாமல், வயலில் ஒரு போர்வை போல் பரப்பி வைக்க வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை பாசனம் செய்தால் பயிர் பாதிப்பின்றி காப்பாற்றலாம். வறட்சி காலங்களில், ஒருசால் விட்டு ஒரு சால் மட்டும் நீர் பாய்ச்சலாம். நீர் பாய்ச்சாத சால்களில், சோகைகளை பரப்பி வைத்து, மண்ணில் இருந்து நீர் ஆவியாவதை கட்டுப்படுத்தலாம். சால் பாசன முறøயின் மூலம் பாய்ச்சும் நீரை கொண்டு சொட்டு நீர் பாசனத்தில், இரண்டு மடங்கு அதிக பரப்பில் நீர் பாய்ச்சலாம்.

மேலும் விபரங்கள் பெற விரும்பும் விவசாயிகள், தங்கள் பகுதியில் உள்ள கரும்பு உதவியாளர்களை அல்லது கரும்பு அலுவலரை தொடர்பு கொள்ளலாம். * புகாருக்கு வசதி: அரூர் கோபாலபுரம், சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு பதிவு செய்தல், பயிர் கடன் பெறுதல் மற்றும் வெட்டும் உத்தரவு பெறுவதில் தாமதம் ஏற்பட்டால், இது தொடர்பாக புகார் செய்யலாம். தனி அலுவலர் சாம்பசிவம், 94425 07611, கரும்பு பெருக்கு அலுவலர் குணசேகரன், 94425 91234 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மல்லிகை பூத்தொடுக்க இலவச பயிற்சி மையம் துவக்கம்"ஆன்லைன்' வர்த்தகத்திற்கும் ஏற்பாடு

மதுரை:மதுரையில், மல்லிகைப்பூ உற்பத்தியை அதிகரித்து, சந்தை வாய்ப்பையும் மேம்படுத்த, இலவச பூத்தொடுக்கும் பயிற்சி மையம் துவக்கப்பட்டுள் ளது.மதுரையின் அடையாளங்களுள் ஒன்றான மல்லிகை பூவுக்கு, சமீபத்தில் "புவிசார் குறியீடு' அந்தஸ்து பெறப்பட்டது. மதுரை மார்க்கெட்டிற்கு தினமும் 10 டன் வரை மல்லிகை வரத்து உள்ளது. திருமங்கலம், திருப்பரங்குன்றம், சத்திரப்பட்டி பகுதிகளில் சாகுபடி நடக்கிறது. சாதாரண நாட்களில் கிலோ ரூ. 100க்கும், விழாக்காலங்களில் ரூ. ஆயிரம் வரையும் மல்லிகை விற்கப்படுகிறது. மல்லிகை சாகுபடியில் பலர் ஈடுபட்ட போதிலும் உற்பத்தியில் போதிய மேம்பாடு இன்றி உள்ளது. இதனால், கூடுதல் விவசாயிகளை இத்தொழிலில் இறக்கி விடவும், மல்லிகை விற்பனையை பெருக்கவும் ஏற்பாடுகள் நடக்கின்றன. மேலும், மதிப்புக் கூட்டு பொருளாக மல்லிகையில் விதவிதமான மலர் மாலை, பூச்செண்டு, மலர் வளையம், பொக்கே, பூ அலங்காரம் போன்றவற்றிற்க்கு பயிற்சி மையம் துவக்கி உள்ளனர். இங்கு பூத்தொடுக்கும் தொழிற் பயிற்சி அளிக்கப்படுவதுடன், அனுபவம் உள்ளவர்களுக்கு ஊதியம், புதிய நவீன தொழில்நுட்பம் கற்றுத் தரப்படும்.மதுரை பூ மார்க்கெட் சங்கத் தலைவர் சோ.ராமச்சந்திரன் கூறியதாவது: மல்லிகைப் பூவுக்கு புவிசார் குறியீடு பெற்றபின், அதன் உற்பத்தியை பெருக்குவது, அதன் மூலம் தொழில், வேலைவாய்ப்பை பெருக்குவதும் அவசியமாகிறது. இதற்காக விவசாயிகளை புவிசார் குறியீடு அமைப்பில் உறுப்பினராக்க ஏற்பாடு செய்து வருகிறோம். மேலும், மல்லிகைப் பூவை மாலைகளாக கட்டித்தர பெண்களுக்கு பயிற்சி மையம் துவக்கி உள்ளோம். இங்கு பூத்தொடுக்க தெரியாதவர்களுக்கு இலவசமாக பயிற்சி அளிக்கப்படும். தெரிந்தவர்களுக்கு கிலோவுக்கு ரூ. 70 சம்பளம் வழங்கப்படும். அதேசமயம், பூத்தொடுத்தலில் நவீன நுட்பங்களும் கற்பிக்கப்படும். மல்லிகை சந்தைப்படுத்துவதை அதிகரிக்க, "சமுத்ரா புளோரா' என்ற வெப்சைட் விரைவில் துவக்கப்பட உள்ளது. இதன் மூலம் மல்லிகைப்பூ மாலை, அலங்காரங்களை "ஆன்லைன்' மூலம் சந்தைப்படுத்தலாம். வருங்காலங்களில் பிறமாநிலம், வெளிநாடுகளிலும் தொடுக்கப்பட்ட

மல்லிகைப்பூ, பால் பூத்கள் முதல் ஷாப்பிங் மால்கள் வரை, பாக்கெட்டுகளில் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்ய உள்ளோம், என்றார்.

## தாவர எண்ணெய் இறக்குமதி 10.55 சதவீதம் உயர்வு



புதுடில்லி:நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி, சென்ற பிப்ரவரி மாதத்தில், 10.55 சதவீதம் உயர்ந்து, 9.69 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே மாதத்தில், 8.76 லட்சம் டன்னாக இருந்தது என, இந்திய எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு (எஸ்.இ.ஏ.,) தெரிவித்துள்ளது.

**கையிருப்பு:**கடந்த மூன்று மாதங்களாக, நம் நாடு அதிகளவில், தாவர எண்ணெயை இறக்குமதி செய்து வருகிறது. இதையடுத்து, இதன் கையிருப்பு, துறைமுகம் மற்றும் எண்ணெய் குழாய்களில், 19.6 லட்சம் டன் என்ற அளவில் உயர்ந்துள்ளது. இது, நாட்டின், 40 நாள் சமையல் எண்ணெய் பயன்பாட்டை ஈடு செய்யக்கூடிய அளவாகும்.

சென்ற பிப்ரவரியில், இறக்குமதி செய்யப்பட்ட, 9.69 லட்சம் டன் ஒட்டு மொத்த தாவர எண்ணெயில், சமையல் எண்ணெய் இறக்குமதி, 9.54 லட்சம் டன்னாக உள்ளது. இது தவிர, சமையல் சாராத எண்ணெய் இறக்குமதி, 14,999 டன்னாக உள்ளது என, எஸ்.இ.ஏ., தெரிவித்துள்ளது.

கடந்த 2012ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், 8.76 லட்சம் டன் தாவர எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது. இதில், சமையல் மற்றும் சமையல் சாரா எண்ணெயின் பங்களிப்பு முறையே, 8.73 லட்சம் டன் மற்றும் 3,356 டன் என்ற அளவில் குறைந்து காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.மதிப்பீட்டு காலத்தில், ஒட்டு மொத்த தாவர எண்ணெய் இறக்குமதியில், பாமாயில் இறக்குமதி, 3.59 லட்சம் டன்னிலிருந்து, 6.69 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.

**பாமாயில்:**இதையடுத்து, ஒட்டு மொத்த எண்ணெய் இறக்குமதியில், இதன் பங்களிப்பு, 80 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.மதிப்பீட்டு மாதத்தில், ஒரு டன் கச்சா பாமாயிலின் விலை, 1,073 டாலரிலிருந்து, 816 டாலராக குறைந்துள்ளது. இதே போன்று, ஒரு டன் சுத்திகரிக்கப்பட்ட

பாமாயிலின் விலை, 1,104 டாலரிலிருந்து, 870 டாலராக சரிவடைந்துள்ளது. நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில் (நவ.,-அக்.,), முதல் நான்கு மாதங்களில், நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி, 22 சதவீதம் அதிகரித்து, 37.35 லட்சம் டன்னாக உயர்ந்து உள்ளது.சமையல் எண்ணெய் பயன்பாட்டில், நம்நாடு, சீனாவிற்கு அடுத்தபடியாக, இரண்டாம் இடத்தில் உள்ளது.

### சீனாவுக்கு முதன் முறையாக 13,700 டன் மக்காச்சோளம் ஏற்றுமதி



புதுடில்லி:இந்தியா முதன் முறையாக, சீனாவுக்கு, 13,700 டன் மக்காச்சோளத்தை ஏற்றுமதி செய்ய உள்ளது.இவை, அடுத்த மாதம், ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் இருந்து அனுப்பி வைக்கப்படும். சரக்கு போக்குவரத்து செலவு உட்பட, ஒரு டன் மக்காச்சோளம், 320 டாலர் என்ற விலையில் ஏற்றுமதி செய்யப்படும் என, வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

சீனாவிற்கு ஓராண்டில், 50 லட்சம் டன் மக்காச்சோளம் தேவைப்படுகிறது. இந்தியாவில், ஆண்டுக்கு, 70 லட்சம் டன் மக்காச்சோளம் உற்பத்தியாகிறது. இதில், உள்நாட்டிற்கான தேவை, 30 லட்சம் டன்னாக உள்ளது.மக்காச்சோளம் ஏற்றுமதியில் ஏற்படும் பிரச்னைகளுக்கு, இரு தரப்பிலும் சுமுக தீர்வு காணப்படும். இதன் மூலம், வருங்காலத்தில் மேலும், பல ஒப்பந்தங்கள் கையொப்பமாகும் என, அந்த வர்த்தகர் மேலும் தெரிவித்தார்..

### யூரியா உர இறக்குமதி79 லட்சம் டன்னாக உயர்வு



புதுடில்லி:நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான, 11 மாத காலத்தில், நாட்டின் யூரியா உர இறக்குமதி, 78.65 லட்சம் டன்னாக அதிகரித்து உள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதியை (76.75 லட்சம் டன்) விட, 2.5 சதவீதம் அதிகம் என, மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை இணை அமைச்சர் ஸ்ரீகாந்த் ஜெனா பார்லிமென்டில் தெரிவித்தார்.

மத்திய அரசு, யூரியா உரத்தை விவசாயிகளுக்கு, ஒரு டன், 5,360 ரூபாய்க்கு, மானியத்துடன் கூடிய அதிகபட்ச சில்லரை விற்பனை விலையில் வழங்குகிறது. உள்நாட்டில், யூரியா உற்பத்தி, 2.20 கோடி டன் என்ற அளவில் உள்ளது என, அமைச்சர் மேலும் கூறினார்.

நாட்டின் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. உள்நாட்டில் போதிய அளவிற்கு ரசாயன உரங்கள் உற்பத்தி இல்லாததால், வெளிநாடுகளில் இருந்து யூரியா, பொட்டாஷ் உள்ளிட்ட உர வகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இன்றைய வேளாண் செய்திகள்

15.03.2013 A.M

## ரப்பர் விலை திடீர் உயர்வு கிலோவுக்கு ரூ.10 அதிகரிப்பு



குலசேகரம்: ரப்பர் விலை திடீரென கிலோவுக்கு ரூ.10 வரை உயர்ந்துள்ளது. குமரி மாவட்டத்தின் முக்கிய தொழில்களில் ஒன்று ரப்பர் விவசாயம். 2011ம் ஆண்டு இறுதியில் நாட்டுரக ரப்பர் கிலோ ரூ.245க்கு கொள்முதல் செய்யப்பட்டது. கடந்த ஆண்டு ரப்பர் விலை படிப்படியாக குறைந்தது. கடந்த மாதம் வரை ரூ.142.50 ஆக இருந்தது.

ஏப்ரலில் துவங்கும் ரப்பர் பால் வெட்டும் பணி ஜனவரி வரை நீடிக்கும். ஆனால், கடும் வறட்சி காரணமாக முன்கூட்டியே பால்வெட்டும் பணி நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. உற்பத்தி மிகவும் குறைந்து விட்டது. இதனால், கடந்த ஒரு வாரத்தில் ரப்பர் விலை படிப்படியாக உயர்ந்து கிலோவுக்கு ரூ.10 அதிகரித்துள்ளது

## கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி விலை சரிவு கேரட் கிலோ ரூ18

அண்ணா நகர், : கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி விலை திடீரென சரிந்துள்ளது. கேரட் கிலோ ழீ30ல் இருந்து ழீ18 ஆக குறைந்தது.

கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில்

இருந்து தினமும் காய்கறிகள் வருகின்றன. முன்பு தினமும் 220 லாரிகளில் காய்கறி வந்தது. தற்போது வரத்து அதிகரித்து இருக்கிறது. நேற்று 250 லாரிகளில் காய்கறி வந்தது. இதனால் விலையும் சரிந்துள்ளது.

இந்த தகவலை கோயம்பேடு மார்க்கெட் நிர்வாக கமிட்டி உறுப்பினர் சவுந்தரராஜன் தெரிவித்தார்.

மொத்த விலை கடைகளில் ஒரு கிலோ காய்கறி விலை (பழைய விலை அடைப்புக்குள்):

உருளைக்கிழங்கு

ரூ18 (ரூ25)

சேப்பங்கிழங்கு ரூ30 (ரூ35)

சேனை கிழங்கு ரூ17 (ரூ20)

கத்தரிக்காய் ரூ8 (ரூ10)

வெண்டைக்காய் ரூ15 (ரூ18)

பாகற்காய் ரூ20 (ரூ22)

முருங்கை ரூ20 (ரூ30)

புடலங்காய் ரூ12 (ரூ15)

முள்ளங்கி ரூ12 (ரூ15)

கேரட் ரூ18 (ரூ30)

நூக்கல் ரூ13 (ரூ15)

சவ்சவ் ரூ13 (ரூ17)

கோஸ் ரூ7 (ரூ10)

தக்காளி ரூ6 (ரூ8)

காலிபிளவர் ரூ10 (ரூ14)

பச்சை மிளகாய் ரூ13 (ரூ15)

பெரிய வெங்காயம் ரூ15 (ரூ23)

சின்ன வெங்காயம் ரூ35 (ரூ40)

## விவசாயிகளுக்கு பயிற்சி

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டம் தடங்கம் மற்றும் ராமர்கூடல் கிராமங்களில் அட்மா திட்டத்தின் கீழ் கால்நடை ஆராய்ச்சி மையம் மூலம் கறவை மாடுகளில் பால் உற்பத்தியை பெருக்கும் பண்ணை பயிற்சி முகாம் நடந்தது. பயிற்சியில் கறவை மாடுகளுக்கு பால் உற்பத்தியை பெருக்க உதவும் அசோலா மற்றும் தாது உப்பு கரைசல் தயாரிப்பு, கலப்பு தீவனம் தயாரிப்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. ஆடு, மாடுகளுக்கு குடற்புழு நீக்கம், உண்ணி நீக்கம் செய்யப்பட்டது. கால்நடை துறை துணை இயக்குனர் வணங்காமுடி, கால்நடை பல்கலை கழக உதவி பேராசிரியர் மீனலோசினி, உதவி இயக்குனர் இளங்கோவன், வேளாண் துணை இயக்குனர் மேகநாதன், உதவி இயக்குனர் அண்ணாதுரை, உதவி மருத்துவர் சரவணன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். நிகழ்ச்சியில் வட்டார தொழில் நுட்ப மேலாளர் சுமதி, தொழில் நுட்ப வல்லுனர் கார்த்திகேயன் உள்பட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## தென்னை, பனை தொழிலாளர் நிர்வாக குழு கூட்டம்

கரூர், : தென்னை, பனை தொழிலாளர்கள் சங்கத்தின் சிஐடியூ நிர்வாகக்குழு கூட்டம் நொய்யல் குறுக்குச்சாலையில் சங்க தலைவர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது. சிஐடியூ மாவட்ட தலைவர் முருகேசன், செயலாளர் செல்வம் ஆகியோர் பேசினர். நிர்வாகிகள் பாலசுப்பிரமணியன், வடிவேலன், பெரியசாமி, பழனிச்சாமி மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தென்னை, பனை தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலியாக தென்னை மரம் ஏற மரம் ஒன்றுக்கு ரூ.15, தேங்காய் சேகரிப்போருக்கு தினக்கூலியாக பெண்களுக்கு ரூ.250, ஆண்களுக்கு ரூ.350, தேங்காய் நார் உரிப்போருக்கு தேங்காய் ஒன்றுக்கு 50 பைசா நிர்ணயம் செய்ய வேண்டும். முறைசாரா தொழிலாளர் நல வாரியங்களை சீர்படுத்த வேண்டும். வரும் 28ல் தமிழகம் முழுவதும் அரசு அலுவலகங்கள் முன் நடைபெறும்

ஆர்ப்பாட்டத்தில் தென்னை, பனை தொழிலாளர்களை திரளாக பங்கேற்க செய்வது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கிருஷ்ணகிரியில் நவதானிய உணவு கண்காட்சி

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் தொற்றா நோய்களை பற்றிய விழிப்புணர்வு கண்காட்சி நடத்தப்பட்டது. இதில் நவதானிய விருந்து, நலவாழ்விற்கு மருந்து என்ற தலைப்பில் நவதானியம் மூலம் தயாரிக்கப்பட்ட விதவிதமான உணவு வகைகள் பார்வைக்கு கண்காட்சியாக வைக்கப்பட்டிருந்தது.

கண்காட்சியில் நவதானியம் மூலம் தயாரிக்கப்பட்ட கேழ்வரகு ரொட்டி, கேழ்வரகு புட்டு, கேழ்வரகு கூழ், கேழ்வரகு களி, தினைகார புட்டு, அரிசி மாவு புட்டு, அவல் இனிப்பு, இனிப்பு கம்பு, பச்சை பட்டாணி, சுண்டல், துவரை சுண்டல், முளைகட்டிய பச்சைப்பயறு, மாதுளை சாலட், பொட்டுக் கடலை உருண்டை, கொள்ளு பருப்பு பொடி, குதிரைவாலி கேசரி, வரகு, சாமை பிஸ்கட், கறிவேப்பிலை சாதம், தினை காரப்பொங்கல், சர்க்கரை வள்ளிக்கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, வல்லாரை சட்னி, தூதுவளை சட்னி, பிரண்டை சட்னி, முருங்கை கீரை மணத்தக்காளி கீரை, பழக்கலவை தயிர் சாதம் போன்ற 50-க்கும் மேற்பட்ட நவதானிய உணவு வகைகளை மாணவிகள் பார்வைக்கு வைத்திருந்தனர்.

மேலும் கண்காட்சியில் மூலிகை செடிகள், பழவகைகள் பார்வைக்கு வைக்கப்பட்டு, அவற்றில் உள்ள விட்டமின்கள் மற்றும் அதன் பலன்கள் பார்வையாளர்களுக்கு விளக்கப்பட்டன

இன்றைய வேளாண் செய்திகள்

15.03.2013 A.M

## மொரப்பூர், பென்னாகரத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க கோரி ஆர்ப்பாட்டம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் நடந்தது

மொரப்பூர்

வறட்சியால் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க கோரி மொரப்பூர், பென்னா கரத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார் பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**வறட்சி நிவாரணம்**

தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில் நிவாரணம் வழங்க கோரி மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்டு கட்சி சார்பில் மொர ப்பூர் பஸ் நிலையத்தில் ஆர்ப் பாட்டம் நடை பெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட தலைவர் கோவிந்தன் தலைமை தாங்கினார். மாவட்ட குழு உறுப்பினர்கள் குமார், நடராஜன், முருகன், சிசுபாலன், தங்கராஜ் ஆகி யோர் முன்னிலை வகித்தனர். டில்லிபாபு எம்.எல்.ஏ. மாவட்ட செயற்குழு உறுப் பினர் முத்து ஆகியோர் ஆர்ப் பாட்டம் குறித்து விளக்கி பேசினார்கள். இதில் வட்டக் குழு உறுப்பினர்கள் சின்ன ராசு, தனலட்சுமி, நிறைமதி, செல்வம், வீரபத்திரன், புத்தன், வேடியப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவேண்டும். விவசாயி களின் பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்யவேண்டும். புதிய குடும்ப அட்டை வழங்க வேண்டும். கிருஷ்ணகிரி வலது புற கால்வாயை மொரப் பூர் வரை நீட்டித்து தண்ணீர் விடவேண்டும். அரூர் அரசு கலைக்கல்லூரி கட்டுமான பணிகளை உடனே தொடங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி னார்கள்.

**பென்னாகரம்**

இதேபோல பென்னாகரம் தாசில்தார் அலுவலகம் முன்பு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி சார்பில் வறட்சி நிவாரண பணிகளை தொடங்க வேண் டும். குடிநீர் பற்றாக்குறையை போக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக் கைகளை வலியுறுத்தி ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. ஆர்ப் பாட்டத்திற்கு வட்ட செயலா ளர் முருகேசன் தலைமை தாங்கினார். மாநில குழு உறுப் பினர் ஆனந்தன், மாவட்ட செயலாளர் மாரி முத்து ஆகியோர் ஆர்ப்பாட் டம் குறித்து விளக்கி பேசி னார்கள். இதில் தமிழ்நாடு விவசாயி கள் சங்க மாவட்ட தலைவர் ஆறு முகம், ஒன்றியக் குழு துணை தலைவர் மாதன், வட்ட தலைவர் சின்னசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## விருதுநகரில் உண்ணாவிரதம் தமிழக விவசாயிகளுக்காக ஒரு புதிய செயல் திட்டத்தினை அரசு அமுல்படுத்த வேண்டும் வைகோ வலியுறுத்தல்

விருதுநகர்

தமிழக அரசு விவசாயிகளின் நலனுக்காக ஒரு புதிய செயல் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று விருதுநகரில் நடந்த உண்ணாவிரத போராட்டத்தில் பேசிய வைகோ வலியுறுத்தினார்.

உண்ணாவிரதம்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்கக் கோரியும், விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வலியுறுத்தியும் விருதுநகரில் ம.தி.மு.க. சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடந்தது. விருதுநகர் தேசபந்து திடலில் நடந்த இந்த உண்ணாவிரதத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கலந்து கொண்டு பேசியதாவது:–

விவசாயிகளுக்கு தொடர்ந்து வரும் துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் விடியல் காணவும், அவர்களின் நலனை பாதுகாத்திடவும் மத்திய அரசுக்கு விடும் கடைசி எச்சரிக்கையாக இங்கு இந்த உண்ணாவிரத அறப்போர் நடைபெறுகிறது.

விருதுநகர்

நாற்பது ஆண்டுகளாக நான் இந்த திடலில் பல முறை பேசியிருந்தாலும் இன்று இந்த உண்ணா நோன்பு அறப்போரில் பேசுவதை மிகப் பெருமையாக கருதுகிறேன். இங்கு பேசியவர்கள் நான் 2 முறை இந்த தொகுதியில் தோற்கடிக்கப்பட்டதைக் கூறினார்கள். 2 முறை இந்த மக்கள் என்னை வெற்றி அடையச் செய்து பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்ததை கூறவில்லை. அதைத் தான் கூற வேண்டும்.

நான் ஓட்டுக்காக இந்த போராட்டங்களை நடத்தவில்லை. நியாயத்திற்காக எங்கு கிளர்ச்சி நடந்தாலும் அங்கு இந்த வைகோவின் குரல் ஒலிக்கும்.

<u>நிவாரண உதவி</u>

ஒரு விவசாயி ஒரு ஏக்கரில் சாகுபடி செய்ய 7 முறை உழ வேண்டும். 2 முறை உரமிட வேண்டும். 5 முறை களை எடுக்க வேண்டும். ஆனால் பாஸ்பேட் உரம் 50 கிலோ மூடை ரூ.356 லிருந்து 856ஆக விலை உயர்ந்து உள்ளது. காம்ப்ளக்ஸ் உரம் ரூ.247ல் இருந்து ரூ.847ஆக விலை உயர்ந்துள்ளது. ஒரு ஏக்கருக்கு விவசாயிக்கு ஆகும் செலவு சற்று ஏறக்குறைய ரூ.25 ஆயிரத்தை தாண்டி விடும். அதனால்தான் ஒரு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரண உதவி வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

பயிர் கருகி வீட்டுக்கு கொண்டு வர முடியாத நிலையில் உள்ள விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரமும், விவசாயக் கூலி தொழிலாளர்களுக்கு ரூ.10 ஆயிரமும் நிதி உதவி வழங்க வேண்டும். தமிழகத்தில் 12 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். நெல்லை மாவட்டத்தில் ஜெகநாதன் என்ற விவசாயியும், விருதுநகர் மாவட்டத்தில் பாண்டி என்ற விவசாயியும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

<u>மனசாட்சியே இல்லை</u>

‘‘விருதுநகர் மாவட்டத்தில் தற்கொலை செய்து கொண்ட பாண்டிக்கு விவசாய நிலமே இல்லை’’ என்று இந்த மாவட்ட அதிகாரி ஒருவர் அறிக்கை விடுத்தார். அவருக்கு மனசாட்சியே இல்லை. அந்த கிராமமே விவசாயத்தில் ஏற்பட்ட நஷ்டத்தால்தான் அவர் தற்கொலை செய்து கொண்டார் என கூறுகிறது. தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சம் நிவாரண உதவி வழங்க வேண்டும்.

தமிழக அரசு விவசாயிகளுக்கு கூட்டுறவு கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிக்கை வெளியிட்டுள்ளது. ஆனாலும் கூட்டுறவு வங்கிகள் தவணை தவறிய கடன்களை 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று ஒவ்வொரு விவசாயிக்கும் அறிக்கை அனுப்பி உள்ளது. இவ்வாறு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது தமிழக அரசுக்கு தெரியுமா? எனவே கூட்டுறவு கடன்களை தள்ளுபடி செய்ய தமிழக அரசு உத்தரவிட வேண்டும்.

மத்திய அரசு தேசிய வங்கிகளில் விவசாயிகளுக்கு தரப்பட்டுள்ள கடன்களை ரத்து செய்ய வேண்டும்.

செயல்திட்டம்

கடந்த 1940–ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ரூஸ்வெல்ட் விவசாயிகளின் நலனுக்காக வேளாண்மை குடிமக்களின் நன்மைக்காக ஒரு புதிய செயல்திட்டத்தை அமுல்படுத்தினார். ரஷ்யாவில் லெனின் தனது கொள்கை கோட்பாடுகளை தளர்த்திக் கொண்டு விவசாயிகளின் நலனுக்காக புதிய திட்டங்களை செயல்படுத்தினார். அதே போன்று தமிழக அரசும் விவசாயிகளின் நலனுக்காக விவசாயிகளை பாதுகாக்க ஒரு புதிய செயல்திட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.

விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உரிய முறையில் இழப்பீட்டுத் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பச்சிளம் பாலகன் பாலச்சந்திரன் மார்பில் 5 குண்டுகள் பாய்ந்து கொடூரமாக கொல்லப்பட்டுள்ளான். இதனைக் கண்டு கோடான கோடி மக்கள் உலகம் முழுவதும் மனம் வருந்தியுள்ளனர்.

தொப்புள் கொடி உறவான ஈழத்தமிழர்களை படுகொலை செய்து ஆயிரக்கணக்கான இந்து கோவில்களை இடித்த இலங்கை அதிபர் ராஜபக்ஷே திருப்பதி கோவிலில் தரிசனம் செய்ய மத்திய அரசு ஏற்பாடு செய்கிறது. இது நியாயம்தானா?

மத்திய அரசு நதிநீரை தேசிய மயமாக்க வேண்டும் என்று கடந்த 2002–ம் ஆண்டு பாராளுமன்றத்தில் நான் வலியுறுத்தினேன். தற்போது மத்திய அரசு தேசிய நீர் கொள்கையை அறிவித்துள்ளது. அதன்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கோ, மாநில அரசுக்கோ குடிநீர் வினியோகம் செய்யும் அதிகாரம் இல்லை. விவசாயிகள் தங்கள் பாசனத்துக்கு ஆழ்குழாய் கிணறு தோண்டக்கூடாது. எல்லாவற்றுக்கும் தனியார் நிறுவனங்களையே நம்பி இருக்க வேண்டியிருக்கும். இந்த மசோதா கொடுமையான மசோதா. இந்த மசோதா சட்டமாக நிறைவேற்றப்படக்கூடாது. இயற்கை தரும் தண்ணீரை பணமாக்க மத்திய அரசுக்கு அதிகாரம் தந்தது யார்? இதே நிலை நீடித்தால் நாம் சுவாசிக்கும் காற்றுக்கும் கட்டணம் செலுத்த வேண்டும் என்று மத்திய அரசு சொல்லி விடும். எனவே தேசிய நீர் வழிக்கொள்கையை சட்டமாக்க அனுமதிக்கக் கூடாது.

இவ்வாறு வைகோ பேசினார்.

இந்த உண்ணாவிரதத்தில் மாவட்ட செயலாளர் ஆர்.எம்.சண்முகசுந்தரம், முன்னாள் எம்.பி. சிப்பிப்பாறை ரவிச்சந்திரன், விருதுநகர் முன்னாள் எம்.எல்.ஏ. ஆர்.வரதராஜன், நகர செயலாளர்

ராமர், முன்னாள் நகர செயலாளர் சிவக்குமார், மாவட்ட துணைச் செயலாளர் கோதண்டராமன், இலக்கிய அணி செயலாளர் மோகன்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் முல்லைப்பெரியாறு பாசன சங்கத்தலைவர் அப்பாஸ், மாவட்ட இந்திய கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் ராமசாமி, பொன்னுப்பாண்டியன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

## வெட்டுக்காடு பகுதியில் விவசாய நிலங்களில் யானை கூட்டம் நடமாட்டம் விவசாயிகள் பீதி

கம்பம்

வெட்டுக்காடு பகுதியில் உள்ள விவசாய நிலங் களில் யானைகள் கூட் டம், கூட்டமாக நடமாடு வதால் விவசாயிகள் பீதி யடைந்துள்ளனர்.

**யானைகள் நடமாட்டம்**

தேனி மாவட்டம், கம்பம் ஊராட்சி ஒன்றியம் குள்ளப் பகவுண்டன்பட்டி ஊராட்சி யில் 1வது வார்டில் வெட்டுக் காடு, இந்திராநகர் எள்கரடு, ஊமையன் தொழு ஆகிய பகுதிகள் உள்ளன. இந்த பகுதிகள் மேற்கு தொடர்ச்சி மலை அடிவார பகுதிகளான சுருளியாறு மின்நிலைய வனப் பகுதியில் அமைந்து உள்ளது. இங்குள்ள மலை அடிவார பகுதிகளில் ஆயிரக்கணக் கான ஏக்கர் பரப்பளவில் விவ சாய விளை நிலங்கள் உள்ளது.

இதில் தென்னை, வாழை, கொட்டை முந்திரி, தண்ணீர் பழம் உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் பயிரிடப்பட்டுள் ளன. கடந்த சில நாட்களாக இந்த பகுதியில் 8க்கும் மேற் பட்ட யானைகள் இரண்டு பிரிவுகளாக மாலை நேரங் களில் எள்கரடு பகுதியை நோக்கி வருகிறது. இங்குள்ள விளை நிலங்களில் உள்ள தண் ணீர் பழங்களை சாப்பிட்டும், சேதப்படுத்தியும் வருகிறது.

மேலும் தென்னை மரங் களை வேரோடு பிடுங்குகிறது. சில மரங்களை உரசி கீழே தள்ளி சாய்க்கிறது. யானை கூட்டங்களை கண்ட விவசாயி கள் யானைகளை விரட்ட பட்டாசுகளை வெடிக்கின் றனர். தப்பு கொட்டுகளை கொட்டுகின்றனர். இரவு 12 மணி வரை ஒலிபெருக்கிகளின் மூலம் காட்டு பகுதியில் பாடல்களை ஒலிபரப்பி வருகின்றனர்.

**கோரிக்கை**

இது குறித்து குள்ளப்பகவுண் டன்பட்டி ஊராட்சி துணைத் தலைவர் எம்.முருகன் கூறிய தாவது:

மாலை நேரங்களில் விவ சாய நிலங்களில் இறங்கும் யானைகள் பயிர்களை கடுமை யாக சேதப்படுத்தி விடுகிறது. யானைகளை விவசாயிகள் விரட்டுவதற்கு பயமாக உள்ளது. இரண்டு பிரிவாக யானைகள் வருகிறது. மேலும் கடந்த சில நாட்களுக்கு முன் னர் ஒரு பெண் யானை வயது முதிர்ந்ததால் இறந்தது.

இதன் எதிரொலியாக யானைகள் கூட்டம் இந்த பகுதியில் நடமாடி வருகிறது. இதுவரை சுமார் ரூ.10 லட்சம் மதிப்புள்ள விளைபயிர்கள் சேதமாகி இருக்கும். வனத் துறையினர் யானைகளை மலையடிவார பகுதிக்கு வர விடாமல் தடுக்க அகழிகளை வெட்டி, மின்சார வேலிகளை அமைக்க வேண்டும் என்று இந்த பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

இவ்வாறு துணைத்தலைவர் எம்.முருகன் கூறினார்.